(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 399.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 23, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2693/ ’12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் கல்வி சார் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தின் கீழுள்ள பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த பீடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிலவும் மானிட மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்துக்கான அபிவிருத்தி திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(v) அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்;

(vi) மேற்படி திகதி ஏற்பாட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் காலம் கட்டம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3309/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தற்போதுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் மொத்த எண்ணிக்கையையும்;

(ii) மேற்கூறிய ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்க வேண்டிய வைத்தியர்கள், தாதிமார்கள், உதவியாட்கள், தொழிலாளர்கள், பிற தரங்களிலுள்ள அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(iii) அவ்வைத்தியசாலைகளில் மேற்கூறிய ஒவ்வொரு பதவிகளிலும் தற்போது சேவையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையையும்;

(iv) மேற்கூறிய வைத்தியசாலைகளில் பதவி வெற்றிடங்கள் ஏதேனும் காணப்படுமாயின் அவற்றை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) அவ்வாறெனின், அது மேற்கொள்ளப்படும் காலப்பகுதியையும்;

(vi) மேற்கூறிய வைத்தியசாலைகளில் மிகைப் பணியாளர்கள் காணப்படின், அவர்கள் ஈடுபடுத்தப்படும் பணிகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3960/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லுனுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் கீழுள்ள தோட்டங்களிலிருந்த சுமார் 300 கறவை மாடுகள் போலியான கேள்விப்பத்திரம் கோரப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளில் கறவைப் பசுக்களும், கன்றுக் குட்டிகளும், சினைப் பசுக்களும் இருந்தனவென்பதையும்;

(iii) அரச சட்ட விதிகளுக்கமைய இறைச்சிக்காக காளை மாடுகளை மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறு விற்பனை செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மாட்டினதும் வயது மற்றும் நிறை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளை கொள்வனவு செய்துள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மாடுகள் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4091/ '13

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் செயலற்றுப் போன நாட்கள் இருந்தனவா;

(ii) அவ்வாறு செயலற்றுப்போகச் செய்தமைக்கு ஏதுவான காரணங்கள் யாவை;

(iii) மசகெண்ணையை உரிய வகையில் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதா;

(iv) அந்நாட்கள் யாவை;

(v) மசகெண்ணெய் இன்மை காரணமாக சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் மொத்தமாக எவ்வளவு;

(vi) மசகெண்ணெய் பற்றாக்குறை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில் அவ்விசாரணையில் தவறாளிகளாக காணப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4227/ '13

5.

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபை பிரதிநிதிகள், நகர சபை பிரதிநிதிகள் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகளில் தற்போது, ஊழல், குற்றச்செயல் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டமை காரணமாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், உரித்தான அரசியல் கட்சிகள் மற்றும் இவர்கள் மாகாண சபையில், நகர சபையில் மற்றும் பிரதேச சபையில் வகித்த அல்லது தற்போது வகித்துவருகின்ற பதவிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் தற்போது சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டவாறு ஊழல் பேர்வழிகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதன் காரணமாக திட்டமிடப்பட்ட ஊழல்கள், குற்றச் செயல்கள் மற்றும் பலதரப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஊழல் பேர்வழிகள் மற்றும் குற்றவாளிகள் பிரதேச மற்றும் மாகாண சபை அரசியலில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4297/ '13

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க களஞ்சியங்களிலுள்ள மேலதிக நெல் இருப்புகளை விலங்கு உணவுக்காக குறைந்த விலைக்கு விற்பனை செய்யத்தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல் இருப்புகளை குறைந்த விலையில் விலங்குகளுக்கான உணவாக விற்பனை செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசாங்க களஞ்சியங்கள் நெல்லைக் கொள்வனவு செய்யும் போது ஈரத்தன்மையுடனான நிறை பரிசீலிக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) கொள்வனவு செய்யும் போது நெல் இருப்புகளில் காணப்பட வேண்டிய ஈரத்தன்மையுடனான நிறை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4568/ '13

7.

கௌரவ துனேஷ் கன்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்கள் மிகக்கூடுதலான வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு ஈட்டித்தரும் பத்து மத்திய கிழக்கு நாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றும் இலங்கையர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் இலங்கைத் தூதரகங்கள் அமைந்துள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தூதரகத்திலும் சேவையாற்றுகின்ற மொழிபெயர்ப்பு அலுவலர்களினதும் தொழில் அலுவலர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நாடுகளில் சேவையாற்றுகின்ற இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஒப்பீட்டளவில் போதியளவு பணியாட்டொகுதியினர் தூதரகங்களில் சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை எற்றுக் கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை ஊழியர்கள் மேற்படி நாடுகளில் பொலிசாரால் கைது செய்யப்படும் பட்சத்தில் உடனேயே அது தொடர்பாக இலங்கை தூதரகங்களுக்கு அறிவிப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கைக்கும் மேற்படி நாடுகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அவ்வாறான முறையியலொன்றை வகுப்பதன் மூலம் சட்டப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற இலங்கை ஊழியர்களுக்கு தூதரகங்களின் ஆதரவைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4586/ ’13

8\.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) நுரைச்சோலையை மின் உற்பத்தி நிலையத்தில் பயன்படுத்துவதற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இறக்குமதி தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதியுடன் தொடர்புபட்ட நிலக்கரியின் அளவை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விடயம் குறித்து ஏன் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலக்கரித்தொகுதி இறக்குமதியாளரின் பெயர் என்னவென்பதையும்;

(ii) சொல்லப்பட்ட இறக்குமதியாளர் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார் என்பதையும்;

(iii) இறக்குமதியாளரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் நிலக்கரி இறக்குமதி தொடர்பில் இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதைத் தவிர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4641/ ’13

9\.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோய் பற்றிய விதப்புரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2012 நவம்பர் மாதம் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) அக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வமைச்சர்களின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட அமைச்சரவை உபகுழுவினால் புலமைசாலிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) மேற்படி புலமைசாலிகள் குழுவினால் சிறுநீரக நோயைத் தடுப்பதற்காகவும் நோயாளர்கைளைப் பராமரிப்பதற்காகவும் முன்வைக்கப்பட்ட விதப்புரைகள் யாவை;

(iv) அவ்விதப்புரைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா;

(v) ஆமெனில் அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4767/ ’14

10.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வருடாந்தம் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமையின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமை மாவின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) நாளொன்றிற்கு எவ்வளவு பாண் நுகர்வு செய்யப்படுகின்றது என்பதையும்;

(v) பாண் நுகர்வைக் குறைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4942/ ’14

11.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கித்துல் செய்கை பரவலாக காணப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) கித்துல் செய்கையில் ஈடுகின்ற மற்றும் கித்துல் சார்ந்த உற்பத்திகள் மூலமாக வருமானம் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) கித்துல் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அச்செய்கையினை பெருந்தோட்டங்கள்/தோட்டங்கள் மட்டத்தில் மேற்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) கித்துல் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) கித்துல் உற்பத்திகளை வெளிநாடுகளில் பிரல்யப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) ஆமெனின், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கித்துல் சார்ந்த உற்பத்தி வகைகள் யாவை என்பதையும்;

(ii) இவற்றின் வருடாந்த உற்பத்திகள் பற்றிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவற்றின் அளவுகள் யாவை என்பதையும்;

(iv) கித்துல் செய்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச துறை ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கு ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக அரசாங்கம் வருடாந்தம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) கித்துல் உற்பத்திக் கைத்தொழில் மூலம் அரசாங்கம் ஈட்டும் வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5034/ '14

12.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வடமேற்கிற்கு மகாவலி நீரை திசைதிருப்பும் நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இதுவரை அதன் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதானமான கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிதி மூலங்கள் யாவை என்பதையும்;

(vi) வடமேற்கிற்கு மகாவலி நீரைத் திசைதிருப்பும் நிகழ்ச்சித்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள காலஎல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5168/ '14

13.

கௌரவ ஆர்.எம் ரஞ்சித் மத்துமபண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிபிளை, தியகொபல, 'மயுரசிறி' இல் வசிக்கும் திரு. ஏ.எம். கருணாபால இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியராக 1980.12.16 ஆம் திகதி சேவையில் இணைந்து 2013.06.24 ஆம் திகதி ஓய்வுபெற்றாரென்பதையும்;

(ii) 32 வருடகால சேவையை பூர்த்திசெய்துள்ள இவருக்கு ரூபா 1,250,400.00 பணிக்கொடையாக கிடைக்கவேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. ஏ.எம். கருணாபாலவிற்குரிய பணிக்கொடையை துரிதமாக இவருக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5201/ '14

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 13 (உ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய தெற்கு அபிவிருத்தி நிதி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தானதாக காணப்பட்ட மேற்படி நிறுவனத்தை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தின் ஊழியர்களின் சேவை 2014 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதாக இவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி ஊழியர்களின் தொழில் இழக்கச் செய்யப்படுவதில் நியாயத்தன்மை உள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனத்திற்கு உரித்தான ஆதனங்கள் மற்றும் வாகனங்கள் தெற்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பேற்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5359/ '14

15.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பலாலி விமான நிலையத்தின் நிர்மாண வேலைகள் எப்போது பூர்த்தியடையுமென்பதையும்;

(ii) பொதுமக்கள் பாவனைக்காக அது எப்போது திறக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 8.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கை அணுசக்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 மார்ச்சு 14 ஆம் திகதிய 1853/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 மே 21 ஆம் திகதிய 1863/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 09 ஆம் திகதிய 1870/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 15 ஆம் திகதிய 1871/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 17 ஆம் திகதிய 1871/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.6),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 25 ஆம் திகதிய 1872/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 10.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 26.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 27.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 28.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 29.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 30.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 31.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 32.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

33.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

38.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

39.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.